Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 181

செவ்வாய்க்கிழமை
26 மே 2026

வைகாசி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



## அரசுக்கு மேலான சக்தி நாட்டை இயக்குகின்றது

### முஜிபூர் ரஹ்மான் விமர்சனம்

கொழும்பு, மே 26
மக்கள் ஆணைமூலம் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கமொன்று நாட்டில் இருக்கும்போது, அதற்கு மேலான சக்தியொன்றே தீர்மானம் எடுக்கின்றது இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.
மாகாணசபைத் தேர்தல் இந்த வருடம் நடத்தப்படாது »11

## வடக்கு மாகாணத்திலேனும் தேர்தலை நடத்திக் காட்டுக

### அநுர அரசுக்கு நாமல் சவால்



கொழும்பு, மே 26
முடிந்தால் வடக்கு மாகாணத்திலேனும் மாகாணசபைத் தேர்தலை நடத்திக்காட்டுமாறு அரசாங்கத்துக்குச் சவால் விடுக்கின்றேன் இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.
நாமல் ராஜபக்ச மேலும் தெரிவித்ததாவது:- »11

## வனவளத் திணைக்களத்திடமே காணிகளை ஒப்படைப்போம்!

### முள்ளிக்குளம் காணிகள் தொடர்பில் திசைகாட்டி அரசாங்கம் அறிவிப்பு



மன்னார், மே 26
வவுனியா - முள்ளிக்குளம் பகுதியில் கடற்படையால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளில் கணிசமானவற்றை வனவளத் திணைக்களத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜெயசேகர தெரிவித்தார். »11

## திசைகாட்டி அரசுக்கு ஆயுள் மிகக்குறைவு!

### விமல் வீரவன்ஸ காட்டம்



கொழும்பு, மே 26
ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு ஆயுட்காலம் மிகக்குறைவு. இந்த அரசாங்கம் விரைவில் ஆட்சியில் இருந்து அகற்றப்படும் இவ்வாறு முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.
பத்தரமுல்லயில் உள்ள »11

முன்னாள் பொலிஸ்மா அதிபர்

## தென்னக்கோனுக்கு எதிராக விரைவில் குற்றப்பத்திரிகை



கொழும்பு, மே 26
முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய எதிர்பார்த்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.
2022ஆம் ஆண்டுமே மாதம் 9ஆம் திகதி காலி முகத்திடலில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடு »11

வித்தியா கொலை வழக்கு

## தூக்குத்தண்டனைக் கைதி சிறைக்குள் உயிர்மாய்ப்பு!

யாழ்ப்பாணம், மே 26
புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளில் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு யாழ்ப் »11



## பொருளாதார மீட்சிக்கு அரசிடம் திட்டமில்லை

### ரணில் காட்டம்

விரிவு பக்கம்:- 03



முன்பள்ளிக்குச் சென்ற

## மகளை ஏற்றச்சென்ற இளம்தாய் விபத்தில் பரிதாபச் சாவு

### 'றேஸ்' விட்ட இளைஞர்களால் கிளிநொச்சியில் துயரச்சம்பவம்



கிளிநொச்சி, மே 26
கிளிநொச்சி - உருத்திரபுரம் பிரதான வீதியில் இரண்டு மோட்டார்சைக்கிள்கள் நேருக்குநேர் அதிவேகமாக மோதி விபத்துக்குள்ளானதில் பெண்ணொருவர் உயிரிழந்தார். உருத்திரபுரம் பகுதியைச் சேர்ந்த சுகந்தன் கஜீதா (வயது-31) என்ற இளம் தாயே இவ்வாறு உயிரிழந்தவராவார்.சம்பவம்தொடர் »11

## கைதிகளை பார்வையிட விசேட அனுமதி

கொழும்பு, மே 26
ஹஜ் பெருநாள் மற்றும் வெசாக் பௌர்ணமி தினம் ஆகியவற்றை முன்னிட்டு, சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளை அவர்களது உறவினர்கள் நேரில் சந்திப்பதற்கு விசேட ஏற்பாடுகள் »11

பூச்சந்தி பூரான்

"மோட்டச் சைக்கிளில மோட்டுத்தனமா ஓடிறவையால மற்றவையின்ர உயிரெல்லோ அநியாயமாப் போகுது"

மக்கள் ம... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 25.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4442 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 10 58 64 65 |
| விசேட எழுத்து | J |

**ஹந்தஹன ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 25.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1509 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 04 23 33 55 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 25.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0468 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 5 0 9 4 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 25.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2548 |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 25 |
| வெற்றி இலக்கங்கள் | 07 31 48 61 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 25.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6200 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 2 6 1 9 1 1 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 25.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2230 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 05 29 73 76 |
| விசேட எழுத்து | K |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 2505.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0316 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 14 18 63 |

# ஜூன் மாத நடுப்பகுதியில் சாதாரணதரப் பரீட்சை முடிவு

## பரீட்சைகள் திணைக்களம் தெரிவிப்பு

**கொழும்பு, மே 26**

**2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை முடிவுகளை எதிர்வரும் ஜூன் மாத நடுப்பகுதியில் வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

பரீட்சை முடிவுகள் மிக விரைவில் வெளியாகவுள்ளன என்று சமூக ஊடகங்களில் பரவிவரும் செய்திகள் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே, பரீட்சை முடிவுகள் வெளியிடப்படும் திகதியை தற்போதைக்கு அறிவிக்க முடியாது என்று தெரிவித்துள்ளார். ஜூன் மாத நடுப்பகுதியில் சாதாரண தரப் பரீட்சை முடிவுகளை வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை கடந்த பெப்ரவரி 17ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நடைபெற்றதுடன், இதற்காக 4,51,463 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

அவர்களில் 3,82,249 பேர் பாடசாலை விண்ணப்ப தாரர்கள் எனவும், 69,214 பேர் தனிப்பட்ட விண்ணப்பதாரர்கள் எனவும் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)

அரச மருத்துவமனைகளுக்கு

# 114 மில்லியன் ரூபா செலவில் நவீன 'கொல்போஸ்கோப்பி'

கொழும்பு, மே 26

பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய்களில் ஒன்றான கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து, சிகிச்சையளிப்பதுக்காக 114 மில்லியன் ரூபா செலவில் 18 அதிநவீன 'கொல்போஸ்கோப்பி' இயந்திரங்களை மருத்துவமனைக் கட்டமைப்பில் இணைக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்மூலம் நாட்டில் உள்ள மொத்த இயந்திரங்களின் எண்ணிக்கை 15 இலிருந்து 33 ஆக உயர்வடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

60 இலட்சம் ரூபா பெறுமதியான 12 இயந்திரங்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அநுராதபுரம், கண்டி, கம்பஹா உள்ளிட்ட மருத்துவமனைகளில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளன. மேலும் 42 மில்லியன் ரூபா செலவில் எஞ்சிய 6 இயந்திரங்கள் எதிர்வரும் வரும் ஜூன் மாதத்துக்குள் வவுனியா, அம்பாறை, ராகம, களுத்துறை போன்ற போதனா மற்றும் மாவட்ட பொது மருத்துவமனைகளில் நிறுவப்படவுள்ளன. கர்ப்பப்பை வாய் மற்றும் யோனிப் பகுதியிலுள்ள அசாதாரண செல்கள் அல்லது புண்களை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிய இந்த அதிநவீன உபகரணம் உதவுகிறது. ஹியுமன் பாப்பிலோமா வைரஸ் மூலம் பரவும் இந்தப் புற்றுநோயால் நாட்டில் ஆண்டுதோறும் 1,200 பேர் பாதிக்கப்படுகின்றனர். முறையான சிகிச்சையின்மையால் 180 பேர் வரை உயிரிழக்கின்றனர் என்று தேசிய புற்றுநோய்க் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத் தரவுகள் தெரிவிக்கின்றன. (ச-இ)

# 2.1 டிரில்லியனைத் தாண்டியது நாட்டில் நாணய அச்சிடுதல்!

## மனித உரிமைகள் மையம் தெரிவிப்பு

கொழும்பு, மே 26

இலங்கை மத்திய வங்கியின் பரந்த ஒருங்கிணைந்த பண விநியோகம் (நாணய அச்சிடுதல்) ரூ. 2.1 டிரில்லியனைத் தாண்டியுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் மையம் தெரிவித்துள்ளது.

'இலங்கை மனித உரிமைகள் மையம்' என்ற தலைப்பின் கீழ் ஒரு அறிக்கையை வெளியிட்டு, இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின்படி, ஜனவரி 2025 நிலைவரப்படி மொத்த பரந்த பண விநியோகம் ரூ. 14,439.1 பில்லியன் ரூபாவாக இருந்த இது, மார்ச் 2026க்குள் 16,585.7 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

அதன்படி, கடந்த 15 மாதங்களில் மட்டும் பண விநியோகம் 2,146.1 பில்லியன் ரூபாவாக (2.1 டிரில்லியன்) விரிவடைந்துள்ளது என்று அந்த அறிக்கை காட்டுகிறது.

மேலும், கடந்த 15 மாதங்களில் மொத்த பரந்த பண விநியோகம் (M2b) அல்லது தொழில்நுட்ப ரீதியாக பண அச்சிடுதல் மூலம் மத்திய வங்கி எவ்வாறு பணத்தை உருவாக்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 25.05.2026 | திங்கட்கிழமை | S | 5 3 5 4 5 1 | 0908 |

**Super Ball**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 25.05.2026 | திங்கட்கிழமை | 3174 | Z | 23 26 73 76 |

**சனிதா**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 25.05.2026 | திங்கட்கிழமை | A | 08 15 60 68 | 5335 |

**SASIRI**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 25.05.2026 | திங்கட்கிழமை | 1004 | 21 36 41 |

**லக்ன ராசி**

| திகதி | தினம் | | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 25.05.2026 | திங்கட்கிழமை | மேஷம் | 16 35 51 60 | 4886 |

**KAPRUKA**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 25.05.2026 | திங்கட்கிழமை | E | 11 | 35 39 45 50 | 2350 |

**அத கோடிபதி**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 25.05.2026 | திங்கட்கிழமை | Q | 10 20 33 70 | 3000 |

# ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய 160,000 பட்டதாரிகள்

கொழும்பு,மே 26



தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் நிலவும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு 160,000க்கும் அதிகமான பட்டதாரிகள் விண்ணப்பித்திருந்தனர் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. அரச சேவையில் உள்ள பட்டதாரிகள் மற்றும் ஏனைய பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு இணைத்துக் கொள்வதற்காக நடத்தப்பட்ட இந்தப் போட்டிப் பரீட்சை, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதும் உள்ள 1,048 பரீட்சை நிலையங்களில் நடத்தப்பட்டது.

இதற்காக அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் 66,991 பேரும், ஏனைய விண்ணப்பதாரர்கள் 96,442 பேரும் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்தனர்.

இதற்கு மேலதிகமாக, விசேட தேவையுடைய 323 விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வசதிகளை பரீட்சைத் திணைக்களம் வழங்கியிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# வாகன இலக்கத்தகடுகள்; பொலிஸார் எச்சரிக்கை!

கொழும்பு, மே 26

உத்தியோகபூர்வமற்ற அல்லது தரநிர்ணயமற்ற இலக்கத்தகடுகளைப் பொருத்தி வாகனங்களை செலுத்தவேண்டாம் எனப் பொலிஸார் சாரதிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். வாகனப்பதிவு இலக்கத்தகடுகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்ட போதிலும், மாற்றங்கள் செய்யப்பட்ட இலக்கத்தகடுகளைப் பயன்படுத்தி சட்டபூர்வமாக வாகனங்களைச் செலுத்த முடியாது. மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு இணங்க, வாகனத்தின் இலக்கத்தை 'A4' அளவிலான காகிதத்தில் அச்சிட்டுக் காட்சிப்படுத்த சாரதிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே அங்கீகரிக்கப்பட்ட தரங்களைப் பூர்த்தி செய்யாத இலக்கத் தகடுகளைப் பயன்படுத்தும் வாகன உரிமையாளர்களுக்கு எதிராக தொடர்ந்தும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# டொலர் ஏற்றத்தைத் தடுக்க அரசால் ஆக்கபூர்வ உத்திகள்!

## அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவிப்பு

**கொழும்பு, மே 26**

**மத்திய கிழக்கில் தீவிரமடைந்துள்ள யுத்த சூழல் மற்றும் உலகளாவிய எரிசக்தி நெருக்கடிகளுக்கு மத்தியிலும், இலங்கையின் பொருளாதாரத்தைப் பாதுகாத்து நுகர்வோரின் அன்றாட வாழ்க்கையைத் தடையின்றி முன்னெடுத்துச் செல்ல அரசாங்கம் பல ஆக்கபூர்வமான உத்திகளைக் கையாண்டுள்ளது என்று வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இதன் பலனாக, உள்நாட்டுச் சந்தையில் உச்சம் தொட்ட அமெரிக்க டொலரின் மதிப்பு தற்போது வெற்றிகரமாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

சர்வதேசச் சந்தையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் மற்றும் எரிசக்தி விலையேற்றங்கள் காரணமாக நமது இறக்குமதிச் செலவுகள் திடீரென அதிகரித்தன. இதன் காரணமாக, சில நாள்களுக்கு முன்னதாக 350-355 ரூபா வரை உயர்ந்த அமெரிக்க டொலரின் பெறுமதி, தற்போது எமது கடுமையான நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக வெற்றிகரமாகக் கீழ்நோக்கி வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கையின் தற்போதைய பொருளாதாரம், ஏனைய அண்டை பிராந்திய நாடுகளை விடவும் மிகவும் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளது. பொது மக்கள் தங்களின் தேவையற்ற ஆடம்பர நுகர்வுகளைத் தவிர்த்து, இந்த உலகளாவிய நெருக்கடியிலிருந்து தேசத்தை மீட்டெடுக்கும் அரசாங்கத்தின் முயற்சிக்குப் பூரண ஆதரவை வழங்கவேண்டும் - என்றார். (ச-இ)

# பொருளாதாரச் சக்கரங்கள் 4 திசைகளில் ஓடுகின்றன

## ரணில் தெரிவிப்பு



கொழும்பு, மே 26

தற்போதைய அரசாங்கத்திடம் எந்தவொரு திட்டமும் இல்லை. வாகனத்தின் நான்கு சக்கரங்களும் நான்கு திசைகளில் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஒரு தலைவர் என்பவர் முறையான தலைமைத்துவம் வழங்கி நாட்டை வழிநடத்தவே இருக்கிறார். அந்தத் தலைமைத்துவம் இந்த அரசாங்கத்திடம் இருக்கிறதா என்பது பெரிய சந்தேகமாகவே உள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கை ரூபா முறையாக வலுவடைந்திருந்தால், தற்போதைய அரசாங்கம் விதித்துள்ள வரி அதிகரிப்புகள் மக்களுக்குப் பெரிய சுமையாகத் தெரிந்திருக்காது. பணவீக்கம் இல்லாததால் ரூபாவின் மதிப்பு நிலைத்திருக்கும். ஆனால், தற்போதைய ஆட்சியாளர்கள் மேடைகளில் கூறியபடி எதையும் செய்யவில்லை. திட்டமிட்டுச் செய்திருந்தால் நாட்டின் செலவீனங்கள் இந்தளவுக்கு அதிகரித்திருக்காது. தற்போதைய அரசாங்கத்திடம் எந்தவொரு திட்டமும் இல்லை. இந்த வாகனத்தின் நான்கு சக்கரங்களும் நான்கு திசைகளில் ஓடிக்கொண்டிருக்கின்றன.

இன்று, ஐந்து வருடங்களாக வாகன இறக்குமதிகள் முடக்கப்பட்டிருந்த பின்னணியில், அனைத்து வாகனங்களையும் ஒரே நேரத்தில் இறக்குமதி செய்வதில் எந்த அர்த்தமும் இல்லை. தமக்கு உதவிய ஜப்பானியர்களுக்குப் பணம் சம்பாதிப்பதற்கான ஒரு வாய்ப்பாக தற்போதைய ஆட்சியாளர்கள் இதனை மாற்றிக் கொடுத்திருந்தால், அதற்கு இனிமேல் என்ன செய்யமுடியும்? - என்றார். (ச-இ)

# 998 பேர் கைது

கொழும்பு, மே 26

போதைப்பொருளைத் தடுக்கும் நோக்கிலான 'முழு நாடுமே ஒன்றாக' எனும் தேசிய திட்டத்தின் கீழ் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 998 பேர் போதைப்பொருள்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்கள் வைத்திருந்த போதைப்பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

# 2029ஆம் ஆண்டிலும் அநுரவே ஜனாதிபதி!

## கூறுகிறார் அமைச்சர் சுனில்

கொழும்பு, மே 26

எதிர்வரும் 2029ஆம் ஆண்டிலும் அநுர குமார திஸாநாயக்கவே நாட்டின் ஜனாதிபதி என அமைச்சர் சுனில் குமார கமகே தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அநுர குமார திஸாநாயக்க மீண்டும் ஜனாதிபதியாவதனை எவராலும் தடுக்கமுடியாது. தற்போதைய அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தியுள்ளதால் மக்களின் நம்பிக்கை அதிகரித்துள்ளது. கடந்த காலங்களில் நாடு ஓர் இலக்கற்ற வகையில் பயணம் செய்தது. இதற்குப் பிழையான தீர்மானங்களே காரணம். எனினும் தற்போதைய அரசாங்கம் நிலைமைகளை மாற்றி அமைத்துள்ளது. கடந்த சில தசாப்தங்களாகவே அநுரவைப் போன்று நாட்டைக் கட்டி எழுப்பக் கூடிய மற்றும் மக்களின் நம்பிக்கையை பெற்ற ஒரு தலைவர் உருவாகவில்லை.

எனவே 2029ஆம் ஆண்டில் மீண்டும் அநுரவே ஜனாதிபதியாக பதவியேற்பார் - என்றார். (ச-இ)

# பிள்ளையாருக்கு வந்த சோதினை - 2

**மா**ருதப்புரவீகவல்லி எண்ட சோழ இளவரசிக்கு ஒரு சாபத்தால அவாக்கு குதிரையின்ர முகம் வந்திட்டு. அந்தச் சாபத்தில இருந்து அவா மீண்ட இடம் தான் மாவிட்டபுரம். அப்பிடிச் சாபம் நீங்கின சந்தோசத்தில அவா ஏழு கோயில்களைக் கட்டினவா எண்டும், அதில நேற்றுப் பட்சியில சொன்ன பிள்ளையார் கோயில் ஒண்டு எண்டும் சொல்லுப்படுது. ஆனால் ஆர் போட்ட சாபமோ, இப்ப அந்தக் கோயில் கடும் பிரச்சினையில சிக்குப்பட்டு, பிள்ளையாருக்கு கொடி ஏறுமோ, இல்லையோ எண்டளவுக்கு நிலைமை போட்டுது. கோயில் பொருளாளர் தொண்டர் சபை அலுவகத் திறப்பையும், கோயில் திறப்பையும் பூட்டிக்கொண்டு போன கடுப்பில பெடியளும், உபயகாரரும், ஊர்ச்சனமும் அடுத்தநாள் விடியவே கோயிலுக்கு முன்னால வந்து குந்தி இருந்திட்டினம். 'பொருளாளர் ஆரைக் கேட்டு திறப்பைக் கொண்டு போனவர்? கோயிலில பிரச்சினையே அவரால தான். அவர் இனிக் கோயிலுக்க வரக்கூடாது. அதுமட்டும் கோயிலை ஆர் வந்தாலும் திறக்க விட மாட்டம்' எண்டு சனங்கள் கொந்தளிக்கத் தொடங்கிட்டினம்.

கோயில் நிர்வாகத்துக்கு சப்போர்ட்டான ஆக்களும் அங்க வந்ததால பெரும் பதகளிப்பட்டு, ஆளையாள் தள்ளி, கண்டபடி பேசி கோயில் எண்டதையே மறந்து எல்லாரும் அதை ஒரு போர்க்களமா மாத்தத் தொடங்கிட்டினம். இவையின்ர சண்டையில அண்டைக்கு பத்தரைக்கு ஏறவேண்டிய பிள்ளையாரின்ர கொடி அந்த நேரம் தாண்டியும் ஏறினபாடில்லை. 'எனக்குக் கலியாணம் தான் தள்ளிப் போச்சுதெண்டு பார்த்தால் இப்பிடிக் கொடியேத்தமும் தள்ளிப்போகுதே' எண்டு உள்ளுக்க இருந்த பிள்ளையார் ரத்தக்கண்ணீர் வடிச்சிருப்பார். பிள்ளையாரின்ர கவலை சனத்துக்கு தெரிஞ்சுதோ இல்லையோ பொலிஸூக்குத் தெரிஞ்சு, அவையள் வந்து கோயிலைத் திறக்கச் சொல்லி நிண்டிருக்கினம். ஆனால் சனம் மாட்டன் எண்டிட்டுது. பிறகு ரண்டு தரப்பையும் கூட்டிக்கொண்டு போய், பொலிஸ் ஸ்ரேசனில வைச்சு கதைச்சு ஒரு உடன்பாட்டுக்கு வந்திருக்கினம். இவ்வளவு பிரச்சினைக்கும் காரணமான பொருளாளர் திருவிழா முடியும் மட்டும் கோயில் விசயத்தில தலைப்போடக்கூடாது எண்டும், திருவிழாவை வழக்கம் மாதிரி தொண்டர் சபையும் சேர்ந்து உபயகாரரோட செய்யலாம் எண்டும், திருவிழா முடிஞ்ச பிறகு பொதுச் சபையைக் கூட்டி தொண்டர் சபைக்கும், நிர்வாகத்துக்கும் உள்ள பிரச்சினைக்குத் தீர்வு காணவேனும் எண்டதும் தான் அந்த உடன்பாடு. அதுக்குப் பிறகுதான் மத்தியானம் கடந்து ஒண்டரை மணிபோலதான் பிள்ளையாருக்குக் கொடியேறினதாம்.

ஆனால் சம்பந்தப்பட்ட பொருளாளர் உடன்பாட்டின்படி நடக்காமல் இப்பவும் கோயில் விசயங்களில தலைப் போடுறாராம். தொண்டர் சபையின்ர 'லவுட் ஸ்பீக்கர்' தான் திருவிழாவில வழமையாப் பாவிக்கிறவை. பொருளாளர் என்னெண்டால் வெளியால இருந்து 'லவுட் ஸ்பீக்கரை' கொண்டந்திட்டு அதுக்கு உபயகாரர் புறிம்பா ஒரு லட்சம் தரவேனும் எண்டு சொல்லியிருக்கிறார். ஆனால் உபயகாரர் மாட்டன் எண்டதால முந்தின மாதிரி தொண்டர் சபையின்ர 'லவுட் ஸ்பீக்கரை'த் தான் திருவிழாவுக்குப் பாவிக்கினமாம். அந்தக் கோபத்தில தொண்டர்சபை பெடியன் ஒருத்தருக்கு தோட்டத்துக்க வைச்சு அடிச்சுப் போட்டினம் எண்டும் கதை. அதால திருவிழா ஒழுங்கா நடந்து முடியுமோ எண்டு சனத்துக்கு மட்டுமில்லை பிள்ளையாருக்கே நெஞ்சுக்க 'திக் திக்' எண்டபடிதான் இருக்கும் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 26

சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக சிவ நெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருமந்திரச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் -7 எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு தெல்லிப்பழை மாவை கலட்டி அருள் மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது. திருமூலநாயனார் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், திருவாசகப்பிரியன் பிரசங்கபூஷணம் பொன்.சந்திரவேலின் 'இம்மைக்கும் மறுமைக்கும் பயன் தரும் திருமந்திரம்' எனும் பொருளில் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

★★★★

யாழ்ப்பாணம், மே 26

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத்தொடரின் 54ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள நிகழ்வில் கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்த குரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையும், பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனின் தலைமையுரையும், பண்டிதர் திருவாசகப்பிரியன் த. மனோஜ்குமாரின் 'தேவர் புலம்புறு படலம்' எனும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. சொற்பொழிவிலிருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும்என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)



# கிளி. இந்துக் கல்லூரியின் ஆறாவது குருதிக்கொடை

கிளிநொச்சி, மே 26

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் 2017ஆம் ஆண்டு சாதாரண தர பழைய மாணவர் சங்கத்தின், ஆறாவது குருதிக்கொடை முகாம், கல்லூரி வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. அவசர குருதித் தேவையை நிவர்த்தி செய்யும் உன்னத நோக்கோடு, சமூகப் பொறுப்புணர்வுடன் பழைய மாணவர் சங்கத்தினர், இந்த முகாமைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர். பருத்தித்துறை மந்திகை ஆதார மருத்துவமனையின் விசேட மருத்துவநிபுணர்கள் மற்றும் தாதியர்கள் அடங்கிய மருத்துவக் குழாமினர் குருதிச் சேகரிப்புப்பணிகளைமேற்கொண்டனர். (க-113-சி)

# குத்துச்சண்டை ஆடுகளம் பருத்தித்துறையில் திறப்பு

யாழ்ப்பாணம், மே 26

யாழ்.மாவட்டத்தில் முதலாவது குத்துச்சண்டை ஆடுகளம் பருத்தித்துறையில் கடந்த சனிக்கிழமை திறக்கப்பட்டுள்ளது. வடமாகாண விளையாட்டுத்திணைக்களத்தால், 2025 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின்கீழ், பருத்தித்துறை சென்தோமஸ் நூலகக் கட்டடத்தின் மேல் தளத்தில் தற்காலிகமாக இந்த ஆடுகளம் நிறுவப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி கே. விஜிதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், விளையாட்டுத் திணைக்கள வட மாகாணப் பணிப்பாளர் பி.முகுந்தன், பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ்பபோல், இலங்கை குத்துச்சண்டைச் சம்மேளனத்தின் தலைவர் அனுருத்த சானக பண்டார, இலங்கை தொழில்முறை குத்துச்சண்டைக்கழக இயக்குநர் நாணயக்கார மற்றும் குத்துச்சண்டை நடுவர்கள் மற்றும் விளையாட்டுக்கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர். (க-100-பி)

# காற்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், மே 26

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுமதியுடன் யாழ்.மாவட்டச் செயலகத்தின் விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்டுவரும் காற்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியை எதிர்த்து உடுவில் பிரதேச செயலக அணியும், பி.ப. 3.30 மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து கரவெட்டிப் பிரதேச செயலக அணியும் மோதவுள்ளன. (41-422)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 26

எழுத்தாளர் பொன்.சுகந்தனின் 'கடுகுக்குள் காரம்' எனும் நான்காவது ஹைகூ கவிதை நூல் வெளியீடு நாளைமறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு, கொழும்பு வெள்ளவத்தை GREEN PALACE INN மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்துடன் மண்முடி எனும் ஹைகூ கவிதைத்தொகுதி, நாளை புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வெளியிடப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)



யாழ்.போதனா மருத்துவமனையின் விபத்து அதிதீவிர சிகிச்சைப்பிரிவுக்கு 1.2 மில்லியன் ரூபா பெறுமதியான AUTOCLAVE இயந்திரத்தையும், 1 மில்லியன் ரூபா பெறுமதியான நிலையான வைப்புப் பத்திரத்தையும், இந்தச் சிகிச்சைப் பிரிவில் சுமார் 3 வாரங்கள் சிகிச்சை பெற்ற பயனரும், அவரது நண்பர்களும் இணைந்து நேற்றுக் கையளித்தனர். (க)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தைவழியில் ஆதாயம் கிடைக்கும். மனதில் உற்சாகம் உண்டாகும். அலுவலகத்தில் முக்கியமான பொறுப்பு ஒன்றுக்கு உங்கள் பெயர் பரிந்துரைக்க வாய்ப்பு உண்டு.

**இடபம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனாலும், வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் - மனைவிக் கிடையே இருந்த கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். சக பணியாளர்கள் விஷயத்தில் தலையிட வேண்டாம்.

**மிதுனம்:** திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். பிற்பகலுக்குமேல் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாள். எதிர்பாராத பணவரவு உண்டாகும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். மாலையில் உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உண்டாகும்.

**சிம்மம்:** மனதில் தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முக்கியமான பிரமுகர்களின் அறிமுகம் கிடைப்பதுடன், அவர் களால் ஆதாயமும் கிடைக்கும்.

**கன்னி:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் உணவு விஷயத்தில் கவனம் தேவை. சிலருக்குத் திடீர்ப்பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். காரியங்களில் தடை தாமதங்கள் ஏற்படக்கூடும். ஆனால், குடும்ப உறுப்பினர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

**விருச்சிகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்திசெய்வீர்கள். துணிச்சலாக சில முடிவுகளை எடுப்பீர்கள்.

**தனுசு:** மனதில் சஞ்சலம் ஏற்படும். வீண் செலவுகளால் கையிருப்புக் கரையும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார்.

**மகரம்:** மனதில் உற்சாகம் உண்டாகும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய டிசைனில் ஆடைகள் வாங்கி மகிழ்வீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் மற்றவர்களை அனுசரித்துச் செல்லவும். வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. எதிர்பாராத செலவுகளால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும்.

**மீனம்:** உற்சாகமான நாள். வாழ்க்கைத் துணைவழியில் சுபச்செலவுகள் ஏற்படும். உங்கள் தேவை அறிந்து மற்றவர்கள் உதவி செய்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



உண்மை - நேர்மை - அஞ்சாமை

# தேசத்தின் ஜனநாயகம் என்பது...!

இலங்கையின் ஜனநாயகக் கட்டமைப்பில் மாகாண சபைத் தேர்தல் என்பது ஒரு நீண்டகால இழுபறி நாடகமாகவே இருந்து வருகிறது. முன்னைய அரசாங்கங்கள் எல்லை நிர்ணயக் குளறுபடிகள், புதிய தேர்தல் முறைமை எனப் பல காரணங்களைக் கூறி தேர்தலைப் பின்போட்டு வந்த நிலையில், தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் அதே பாதையில் பயணிக்கத் தொடங்கியிருப்பது வேதனையளிக்கிறது. 'இந்த ஆண்டு மாகாணசபைத் தேர்தலை நடத்தும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை' என்று அந்தக்கட்சியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்துள்ள கருத்து, அதிகாரப் பரவலாக்கத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மக்களுக்கு விழுந்த மற்றுமொரு பேரிடியாகும். தேர்தல் நிதியை அனர்த்த நிவாரணத்திற்குப் பயன்படுத்தியதாகக் கூறுவது, ஒரு நாட்டின் ஜனநாயகக் கடமையைச் செய்யத் தவறியதற்குச் சொல்லப்படும் பலவீனமான சாக்குப்போக்காகவே தெரிகிறது.

தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதி அனர்த்தங்களுக்காகச் செலவிடப்பட்டதாகக் கூறுவது, ஒரு அரசாங்கத்தின் நிதி முகாமைத்துவத்தில் இருக்கும் குளறுபடிகளையே காட்டுகிறது. அனர்த்தங்கள் என்பது எதிர்பாரா தவைதான்; ஆனால் அதற்காக ஜனநாயகத்தின் அடிப்படை அங்கமான தேர்தலை இரத்துச் செய்வது என்பது ஒரு நாட்டின் முதுகெலும்பை ஒடிப்பது போன்றதாகும். ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட சட்டச்சிக்கல்களைக் காரணம் காட்டும் அரசாங்கம், அந்தச் சட்டப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏன் போதிய அக்கறை காட்டவில்லை என்ற கேள்வியும் எழுகிறது. நாடாளுமன்றக் குழுவை நியமித்து அறிக்கைகளுக்காகக் காத்திருப்பது என்பது, தேர்தலை கால வரையறையின்றி ஒத்திவைப்பதற்கான ஒரு பழைய 'அரசியல் தந்திரோபாயம்' என்பதை மக்கள் ஏற்கனவே பலமுறை கண்டு சலித்துப் போய் விட்டனர்.

வடபகுதி மக்களின் பிரதான பிரச்சினையாக இருந்த 'இனவாதம்' இல்லாத நாட்டை உருவாக்கி விட்டதாக ரில்வின் சில்வா கூறுவது யதார்த்தத்திற் குப் புறம்பான ஒரு கற்பனாவாதமாகும். காணி விடு விப்பு மற்றும் வீதித் திறப்பு என்பன வரவேற்கத்தக்கவை என்றாலும், மக்கள் தங்களைத் தாங்களே நிர்வகிப்பதற்கான அரசியல் அதிகாரமான மாகாணசபைத் தேர்தல் என்பது அவர்களின் அடிப்படை உரிமையாகும். அடிமட்ட மக்களைப் பலப்படுத்தும் 'பிரஜா சக்தி' திட்டம் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மக்கள் சபைக்கு ஈடாக முடியாது. இந்தியாவிடமிருந்து அழுத்தம் இல்லை என்று கூறுவது ஒருபுறமிருக்க, உள்நாட்டு மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவது அரசாங்கத்தின் தார்மீகக் கடமையாகும். அந்தப் பொறுப்பிலிருந்து விலகிச் செல்வதற்கு 'நிதிக் குறைபாடு' என்பதைக் கவசமாகப் பயன்படுத்துவது ஆரோக்கியமானதல்ல.

உண்மையில், மாகாணசபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் தயங்குவதற்குப் பின்னால் அரசியல் கணக்குகள் இருக்கலாம் என்ற சந்தேகமே வலுக்கிறது. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் பெற்ற வெற்றியைத் தக்கவைத்துக் கொள்ளவும், மாகாண மட்டத்தில் எழக்கூடிய உள்ளூர் எதிர்ப்புக்களைத் தவிர்க்கவும் அரசாங்கம் இத்தகைய கால நீடிப்பை விரும்புகிறதோ எனத் தோன்றுகிறது. ஆனால், ஒரு தேசத்தின் ஜனநாயகம் என்பது வெறும் பொதுத் தேர்தல்களோடு முடிந்துவிடுவதில்லை. அதிகாரப் பரவலாக்கமும், உள்ளூர் நிர்வாகமும் செழுமையாக இருந்தால் மட்டுமே உண்மையான மாற்றம் சாத்தியம். எனவே, அனர்த்தங்களைக் காரணம் காட்டி தேர்தலை இழுத்தடிக்காமல், அடுத்த ஆண்டிலாவது எவ்விதத் தடையுமின்றி மாகாணசபைத் தேர்தலை நடத்தி, மக்களின் ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்துவதே 'திசைகாட்டி' அரசாங்கத்துக்கு உண்மையான நற்பெயரைத் தேடித்தரும். இதை ஆட்சியாளர்கள் உணர்வார்களா?

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது**

**பொருள்:** தன் நிலையிலிருந்து மாறுபடாமல் அடங்கி ஒழுகுவோனுடைய உயர்வு, மலையின் உயர்வைவிட மிகவும் பெரிதாகும்.



# வாகனக்கடன் எல்லையை குறைத்தது மத்திய வங்கி!

கொழும்பு, மே 26

**இலங்கையில் மோட்டார் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக வணிக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் லீசிங் மற்றும் கடன் வசதிகளுக்கான அதிகபட்ச எல்லைகளை மேலும் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் நேற்றுத் திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வருவதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.**

மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையின் கூட்டத் தீர்மானங்களுக்கு இணங்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போதைய சந்தைச் சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு, வாகனங்களின் சந்தைப் பெறுமதியில் நிதி நிறுவனங்கள் வழங்கக்கூடிய கடன் வரம்புகள் 10 சதவீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளன. வர்த்தக வாகனங்கள் லொறிகள் மற்றும் ஏனைய வர்த்தகப் பயன்பாட்டு வாகனங்களுக்கான அதிகபட்ச கடன் எல்லை இதுவரை இருந்த 70 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. கார்கள், எஸ்.யு.வி. ரக சொகுசு வாகனங்கள், ஹைஎஸ்கள் மற்றும் முச்சக்கரவண்டிகள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கக்கூடிய அதிகபட்ச கடன்எல்லை இதுவரை இருந்த 50 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. வாகன இறக்குமதிகள் மற்றும் சந்தை நாணயப் புழக்கத்தைக் கட்டுப்படுத்தி, பொருளாதார ஸ்திரத் தன்மையைப் பேணவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.
வாகனக் கடன்களைக் கட்டுப்படுத்துவதற்காக மத்திய வங்கி 2025 ஆம் ஆண்டில் இரண்டு தடவைகள் இந்த எல்லைகளைக் குறைத்திருந்தது. (ச-இ)

## தங்கம் கொள்ளை பொலிஸ் கைது!

கொழும்பு.மே.26
கொழும்பில் நபர் ஒருவரைக் கடத்தி 2 கிலோ தங்கத்தைக் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு, வெல்லாவெளி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
அவரை எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் உத்தரவிட்டார். அத்துடன் அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் பணி இடைநீக்கமும் செய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## சட்டவிரோத சிகரெட்டுகள் சீனப் பிரஜைகள் கைது!



கொழும்பு, மே 26
கட்டுநாயக்க விமானநிலையத்தில் சுமார் 60 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய வெளிநாட்டு சிகரெட்டுகளை சட்டவிரோதமாக நாட்டுக்குள் கடத்திவர முற்பட்ட மூன்று சீனப் பிரஜைகள் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமானநிலைய சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் கொண்டுவந்த 6 பயணப் பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 40,000 சிகரெட்டுகளைக் கொண்ட 202 பொதிகள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட சிகரெட் தொகையின் பெறுமதி சுமார் 60 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

# கடற்கொந்தளிப்பு மீனவர்கள் அவதானம்

கொழும்பு,மே 26
புத்தளம் முதல் கொழும்பு, காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையிலான கடற்பரப்புகளில் மணிக்கு 30 முதல் 40 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும். சில பகுதிகளில் அது மணிக்கு 50-60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தால் எதிர்வுகூறப்பட்டுள்ளது. காங்கேசன்துறை முதல் புத்தளம், கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும், புத்தளம் முதல் பொத்துவில் வரையிலான கடற்பரப்புகளில் கடல் அலைகள் 2 முதல் 2.5 மீற்றர் உயரம் வரை எழும்பக்கூடும் என்பதால் மீனவர்கள் மற்றும் கடல்சார் பயணிகள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை** புதன்கிழமை- வைகாசி 13
27.05.2026
சுபநேரம் : 04.22 – 05.52
ராகுகாலம் : 11.52 – 01.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாகாணசபைத் தேர்தலை நடத்தும் வாக்குறுதியை மீறிவிட்டது அரசு!

## மனோ எம்.பி. குற்றச்சாட்டு



**கொழும்பு,மே 26**

**மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்துவோம் என மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தற்போதைய அரசாங்கம் முற்றாக மீறியுள்ளது. இந்தத் தேர்தலை நடத்துவதற்கான எவ்வித சாத்தியமான அறிகுறிகளும் தற்போதைக்குத் தென்படவில்லை என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா அண்மையில் வடக்குக்கு வந்திருந்த போது, "இந்த ஆண்டு மாகாணசபைத் தேர்தலை நடத்தப் போவதில்லை" எனக் குறிப்பிட்டிருந்த கருத்துக்குக் கண்டனங்களைத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, 2025ஆம் ஆண்டில் எப்படியாவது மாகாணசபைத் தேர்தலை நடத்துவோம் என்று குறிப்பிட்டே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆட்சிப் பீடமேறினார். பின்னர் 2025 இல் முடியாது, 2026ஆம் ஆண்டிலாவது தேர்தலை நடத்துவோம் என வாக்குறுதிகள் மாற்றியமைக்கப்பட்டன.

இலங்கையின் நீண்டகால இனப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வாகவே இந்த மாகாணசபை முறைமை கொண்டுவரப்பட்டது. முப்பது வருட கொடூர யுத்தம் முடிவடைந்தகையோடு மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. ஆனால், தற்போது காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள இந்தத் தேர்தலை உடனே நடத்துமாறு அனைத்துத் தரப்பும் வலியுறுத்தும் போது, இந்த ஆண்டும் தேர்தல் இல்லை என ரில்வின் சில்வா கூறுவது முற்றிலும் முறையற்ற, கண்டிக்கத்தக்கக் கருத்தாகும்.

அரசாங்கத்தின் நகர்வுகளில் தேர்தலை நடத்துவதற்கான எவ்விதமான ஆரம்பக்கட்ட அறிகுறி துளிகூடத் தென்படவில்லை - என்றார். (ச-இ)

# பாதாளக்குழுவினரிடம் 272 துப்பாக்கிகள் மீட்பு

கொழும்பு, மே 26

வெளிநாடு சென்று தலைமறைவாகியிருந்த நிலையில் நாட்டுக்கு அழைத்துவரப்பட்ட பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் மற்றும் குற்றவாளிகள் வழங்கிய தகவலுக்கமைய இதுவரை 83 ரி-56 ரக துப்பாக்கிகள் உள்ளடங்கலாக சுமார் 272 துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன என்று கொழும்பு மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஷாந்த சொய்சா தெரிவித்துள்ளார். மேற்படி சந்தேகநபர்கள் வழங்கிய தகவலுக்கமைய மறைத்து வைக்கப்பட்டிருந்த பல்வேறு சட்டவிரோத துப்பாக்கிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. அந்தவகையில், 83 ரி-56 ரக துப்பாக்கிகள், ஒரு எம்-16 ரக துப்பாக்கி, 13 கைத்துப்பாக்கிகள் மற்றும் ரிவோல்வர் ரக 75 துப்பாக்கிகள் உள்ளடங்கலாக 272 துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன. கட்டுத்துப்பாக்கி, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளும் இவ்வாறு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ச-இ)

# நாட்டின் ஜனாதிபதி அநுரவா? ரில்வினா?

## சாணக்கியன் எம்.பி. கேள்வி

கொழும்பு, மே 26

**இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவா அல்லது ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவா என்ற பலத்த சந்தேகம் தற்போது எமக்கு எழுந்துள்ளது. மாகாணசபைத் தேர்தலை இந்த ஆண்டு நடத்தமுடியாது என்று அறிவிப்பதற்கு ஒரு கட்சியின் பொதுச்செயலாளருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சாணக்கியன் இராசமாணிக்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டின் அரசியலமைப்பின்படி தேர்தலை எப்போது நடத்துவது, ஒத்திவைப்பது என்பதைத் தீர்மானிக்கும் முழு அதிகாரமும் 'சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கே' உண்டு. அப்படியிருக்க, அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியின் செயலாளரான ரில்வின் சில்வா தன்னிச்சையாகச் சென்று இந்த ஆண்டு தேர்தல் இல்லை என்று கூறுவது, சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரத்தை அப்பட்டமாக அவமதிக்கும் ஒரு செயலாகும்.

தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றத் தேர்தலின் போது வெளியிட்ட தங்களின் கொள்கைப் பிரகடனத்தில், தாம் ஆட்சிக்கு வந்த மிகக் குறுகிய காலத்திற்குள் மாகாணசபைத் தேர்தலை நடத்திப் பிரதேச வாதங்களை ஒழிப்பதாக வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால், பதவியேற்று பல மாதங்கள் கடந்தும் அதற்கான எவ்வித சாத்தியமான ஆரம்பகட்ட நடவடிக்கைகளையும் தற்போதைய அரசு முன்னெடுக்கவில்லை. எனவே, தமிழ் மக்களின் அரசியல் உரிமையுடன் விளையாடாமல், வழங்கிய வாக்குறுதிக்கு அமைய அரசாங்கம் உடனே தேர்தலை நடத்தவேண்டும்- என்றார். (ச-இ)

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

**Vacancy Advertisement for Fleet Assistant**

The HALO Trust is the world's largest and oldest international humanitarian mine action non-government organization (NGO). For over thirty years, we have been saving lives and helping war-torn communities recover by making their land safe. Our mission is to protect lives and restore the livelihoods of those affected by conflict. HALO has been working in Sri Lanka since 2002 and now has over 600 staff working in the Northern Province with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu.

We are looking to recruit Fleet Assistant based in Kilinochchi. The purpose of the job is to maintain accurate records of fleet operations and spare parts inventory. This role ensures data integrity, supports fleet management activities, and contributes to the smooth functioning of the fleet department.

Job title: Fleet Assistant
Location: Kilinochchi / Mullaitivu
Reports to: Fleet Manager
Working hours: 08.00 to 17.00 hrs

**EDUCATIONAL REQUIREMENTS:**

- Diploma or certificate in Logistics, Transport Management, Business Administration, Mechanical Engineering, or a related field.
- Previous experience in an (I)NGO environment is preferred.
- Knowledge or experience in fleet or transport operations is an advantage.

**Key Responsibilities:**

**Data Entry and Management and Inventory Management.**

- Accurately enter and update fleet data, including vehicle information, maintenance records, and fuel consumption.
- Maintain comprehensive records of Fuel consumption, including quantities, descriptions, and locations.
- Ensure all data is entered into the system in a timely manner and is kept up to date.
- Conduct regular audits of inventory to ensure accuracy.

**Fleet Operations Support.**

- Assist in scheduling and tracking vehicle maintenance and repairs.
- Maintain records of vehicle inspections and ensure compliance with regulatory requirements.

**Communication and Coordination and Administrative Duties.**

- Coordinate with the fleet maintenance team to ensure efficient workflow and minimal downtime.
- Communicate with drivers and fleet operators regarding maintenance schedules and requirements.
- Prepare and maintain documentation related to fleet operations.
- Perform other administrative tasks as required by the Fleet Manager.

**Required:**

- Applicants must be fluent in Tamil / English
- Flexible to work in different locations and districts as required.
- Willingness to travel frequently within HALO operational areas.
- Valid driving license will be an added advantage.

Applications must be submitted to the below address no later than 05 June 2026 either by post or via email below. If there is a sufficient caliber of applicants, we reserve the right to close the role earlier than the date noted. Only successful applications will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply for this role.

HR Manager
The HALO Trust,
450 Thirunagar West, Kilinochchi
hr@halosrilanka.org

The HALO Trust is a company limited by guarantee
Registered in England No. 2228587 Registered Charity No. 1001813 & SC037870 Registered Office: 50 Broadway, London SW1H 0BL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலவச யோகக் கற்கை புதிய பிரிவு ஆரம்பம்

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால், இலவசமாக நடத்தப்படும், யோகக்கலை அடிப்படைக் கற்கைநெறியின் புதிய பிரிவு, அடுத்த மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. நல்லூர்க் கந்தன் ஆலயப் பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில், சனி, ஞாயிறு தினங்களிலும், அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணி முதல் காலை 8 மணி வரை பயிற்சி நடைபெறும். இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள இருபாலாரும், வயது வேறுபாடின்றிக் கலந்துகொள்ளமுடியும். சுமார் 3 மாதங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கை நெறியைப் பூரணமாக முடிப்பவர்களுக்கு, கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும். பயில விரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வருகை தந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்துகொள்ளமுடியும். மேலதிக தகவல்களை 0212222203 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டுபெற்றுக் கொள்ள முடியும் என்று வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (க-66)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ் நகரில் உள்ள வீட்டில் தங்கி நின்று வீட்டு வேலை செய்ய பெண் தேவை.

அல்லது வந்து சென்றாலும் சரி சமையல் வேலை (2 நபருக்கு)

சம்பளம் - 50,000/=

உணவு - காலை மதியம் மற்றும் டீ வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 076 106 1916

# இஸ்ரேல் அமைச்சர் க்வீர் பிரான்ஸ் நுழையத் தடை


பரிஸ், மே 26

இஸ்ரேலின் தேசியப் பாதுகாப்பு அமைச்சரான இடாமர் பென்க்வீர் பிரான்ஸ் நாட்டுக்குள் நுழைய தடை விதித்து, அந்தநாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீன்நோல் பரோட் அதிகாரபூர்வமாக உத்தரவு பிறப்பித்துள்ளார்.

காசாவுக்கு நிவாரணப் பொருள்களைக் கொண்டு சென்ற "க்ளோபல் சுமுத் ப்ளோட்டிலா" என்ற கப்பலில் பயணித்தவர்களை இஸ்ரேல் இராணுவத்தினர் கடற்பரப்பில் வைத்து கைது செய்ததையடுத்து, இந்தத் தடை அறிவிப்பு வெளியாகியுள்ளது. இத்தடை உத்தரவு தொடர்பாக பிரான்ஸ் அமைச்சர் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

க்ளோபல் சுமுத் கப்பலில் பயணித்த ப்ரெஞ்ச் மற்றும் ஐரோப்பியர்களிடம் இஸ்ரேல் அமைச்சர் நடந்துகொண்ட விதம் காரணமாகவே அவர் பிரான்ஸ் நாட்டுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரான்ஸ் குடிமக்கள் மிரட்டப்படுவதையோ அச்சுறுத்தப்படுவதையோ அல்லது கொடூரமாக நடத்தப்படுவதையோ எங்களால் பொறுத்துக்கொள்ளமுடியாது. அதுவும் ஒரு பொது அதிகாரி அவ்வாறு செய்வதை முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்துள்ள ஜீன்நோல் பரோட், இஸ்ரேல் அமைச்சர் மீது பொருளாதாரத் தடை விதிக்கவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத்திடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (எ-இ)



முல்லைத்தீவு நெடுங்கேணி மாமடுச் சந்தி கற்பகா அறநெறிப் பாடசாலையில் கல்விகற்கும் 60 மாணவர்களுக்கு, சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் ஒரு இலட்சத்து 45 ஆயிரம் ரூபா பெறுமதியான புதிய சீருடைகள் வழங்கப்பட்டன. அத்துடன் அறநெறி ஆசிரியர்களுக்கும் புதிய சேலைகள் வழங்கப்பட்டன. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள், ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று உதவிகளை வழங்கினார். (க-66)

## INVITATION FOR BIDS - 2026/03
## MARITIMEPATTU - PRADESHIYA SABHA

1. The Chairman, Divisional Procurement Committee on behalf of the Chairman, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | From 26.05.2026 until 08.06.2026 |
| Pre-Bid Conference | At 10.30 A.M on 02.06.2026 |
| Closing and Opening of Bids | At 10.30 A.M on 09.06.2026 |

| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period up to | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 2026/NP/SB/17 | Renovation of Bridge at Uduppukulam Junction Link Road | MLG | 4.92 Mn | 84 Days | C8or Above (High Way) | 3000.00 | 31/Aug/2026 | 74,000.00 | 28/Sep/2026 |
| 02 | PSDG/NP/MU/MPPS/2026/RE/01 | Purchasing & Fixing of Street Lights at Mullaitivu Beach Road | PSDG | 2.25 Mn | 49 Days | C9or Above (Building) | 2500.00 | 27/Jul/2026 | 34,000.00 | 24/Aug/2026 |

5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Maritimepattu - Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu (T.P:0212290001, email: pskpattu@gmail.com) from 9:00 hrs to 15:00 hrs during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) must be delivered to the Chairman, Divisional Procurement Committee, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu on or before 10.30 A.M as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu.
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu commencing at 10.30 AM as stated in table above.
8. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

Chairman
Divisional Procurement Committee,
Maritimepattu Pradeshiya Sabha,
Kovilkudiyiruppu,
Mullaitivu.
26.05.2026

# ஜனநாயகத்தை மீட்டெடுக்க எதிர்க்கட்சிகள் ஒன்றிணைக

*தயாசிறி எம்.பி. கோரிக்கை*

கொழும்பு, மே 26

அரசாங்கத்தின் தற்போதைய அடக்குமுறைகளுக்கு எதிராகவும், அரசியலமைப்புக்கு முரணான ஜனநாயக விரோதச் செயல்களுக்கு எதிராகவும் தனிப்பட்ட கட்சிப் பாகுபாடுகளைத் தூக்கி எறிந்துவிட்டு எதிர்க்கட்சிகள் அனைத்தும் கைகோர்த்து ஒன்றுபடவேண்டும். அதன் மூலமே நாட்டின் எதிர்காலத்தையும், மக்கள் இறையாண்மையையும் பாதுகாக்க முடியு நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர அழைப்பு விடுத்துள்ளார்.

அரசாங்கத்தின் பிழையான மற்றும் மக்கள் விரோதத் தீர்மானங்களுக்கு எதிராக நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் குரல் கொடுக்கவேண்டியது எமது கடமையாகும். அரசாங்கம் சட்டத்தை முழுமையாகத் தன் கையில் எடுத்துக் கொண்டு, நீதித்துறையின் சுயாதீனத்தன் மையைச் சீர்குலைக்கின்றது. அரசாங்கத்தின் இத்தகைய மிலேச்சத்தனமான ஜனநாயக விரோத மற்றும் நீதித்துறை மீதான அடக்குமுறைகளை முறியடிக்க, நாட்டு மக்கள் அனைவரும் கட்சிப்பாகுபாடின்றி ஓரணியில் திரளவேண்டிய தருணம் இதுவாகும் என்று அவர் தெரிவித்தார். (ச-இ)

# நான்காவது முறையாகவும் எரிபொருள் விலை உயர்வு!

புதுடில்லி, மே 26

இந்தியாவில் மீண்டும் நேற்று எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. கடந்த இரண்டு வாரங்களில் நேற்றோடு நான்காவது முறையாக எரிபொருள் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

பெற்றோல் விலை லீற்றருக்கு 2.46 சதத்தாலும், டீசல் 2.57 சதத்தாலும் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. நேற்றுச் சென்னையில் ஒரு லீற்றர் பெற்றோ லுக்கு 107.77 ரூபாஎனவும் ஒரு லீற்றர் டீசலுக்கு 99.55 ரூபா அறவிடப்படுகிறது. மத்திய கிழக்கில் நிலவி வரும் போர்ச்சூழல் காரணமாகவும் ஹோர்மூஸ் நீரிணையில் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாலும் சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விநியோகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் மசகு எண்ணெய் விலை பீப்பாய்க்கு 105 டொலரை கடந்து விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதனால் பல நாடுகளில் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டு வரும் நிலையில் அண்டை நாடான இந்தியாவிலும் நாளுக்கு நாள் எரிபொருள் விலைகள் உயர்ந்து வருகிறன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 28.04.2026 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் மார்க்கண்டு பரிஷாந்தன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (26.05.2026) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை மறுதினம் (28.05.2026) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கூளாவடி மேற்கு,
ஆனைக்கோட்டை

குடும்பத்தினர்
கிருஷாந்தன் - 077 213 6864

(CS/61512) J-1

## மணவாளக்கோல விழா

யாழ்ப்பாணம்,மே.26

சண்டிலிப்பாய் மத்தி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் மணவாளக்கோலவிழா நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 8:30 மணிக்கு இடம்பெறும். அம்பாளுக்கும், ஏனையபரிவாரமூர்த்திகளுக்கும் பூசைகள் இடம்பெற்று தொடர்ந்து, சுவாமி வெளி வீதியுலா இடம்பெறும்.

(க-63)

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரி கண்டறிவது அரசின் பொறுப்பு!

## எதிர்க்கட்சி தெரிவிப்பு



கொழும்பு, மே 26

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியை கண்டறிய வேண்டியது அரசின் பொறுப்பாகும். இந்த விடயம் தொடர்பில் பொறுப்புக்கூறல் முறையாக நிறைவேற்றப்பட வேண்டும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் நாடாளுமன்ற உறுப்பினருமான அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துக்கு பொறுப்புக் கூறவேண்டிய வர்கள், பிரதான சூத்திரதாரிகள் மற்றும் தொடர்புடையோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என நாம் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்திருந்தோம். ஆனால் தேர்தலில் மக்கள் எமக்கு வாய்ப்பளிக்கவில்லை. ஆட்சியை அநுரகுமார திஸாநாயக்கவிடம் ஒப்படைத்தனர். எனவே, பிரதான சூத்திரதாரி மற்றும் சூழ்ச்சியாளர்களைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டியது தற்போதைய அரசாங்கத்தின் பொறுப்பாகும். இந்த பொறுப்புகூறலை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நாம் தொடர்ந்து குரல் கொடுப்போம். இந்த விடயத்தில் சட்டரீதியாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எதிரணியில் இருந்தாலும் நாம் ஆதரவு வழங்குவோம்-என்றார்.

(ச-44)

# மரண அறிவித்தல்

## செபஸ்தியாம்பிள்ளை மரியதாஸ்



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு, மானிப்பாயை வசிப்பிடமாகவும், ஸ்டேஷன் ரோட், யாழ்ப்பாணத்தை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட செபஸ்தியாம்பிள்ளை மரியதாஸ் அவர்கள் கடந்த 23.05.2026 சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தொம்மை - ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சூசைமுத்து - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சுகிர்தசீலி அவர்களின் அன்பு கணவரும் காலஞ்சென்றவர்களான மாகிறேற், அமிர்தநாயகம் அவர்களின் சகோதரனும், கால்ஞ்சென்ற கென்றி, மற்றும் எட்பின் (கனடா), காலஞ்சென்றவர்களான றெஜினா, அன்ரனி, மற்றும் டைசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தர்ஷினி, தனுஷ்காந்த், எட்மன்ராஜ், மேர்லின் எமில்ராஜ் அவர்களின் அன்புத் தந்தையாரும், தபோதினி, ஜோன்சன்(ரவீந்திரன்) மேரிஅஜந்தா, டிக்சன் (டிச்சா), சுமிர்தா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜிபியோன், தர்வின், ஜொனிகா, ஜொனிலா, ஜொனிஷன், ஆஜேஷ், அக்ஷயன், ஆரோஷ், ஏரன், இவாஞ்சலின், ஐரூஸ், ஆதிரா, மித்ரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (27.05.2026) புதன்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் அடைக்கல மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

தோற்றம் 24.01.1946

மறைவு 23.05.2026

99/5, புகையிரத வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
076 465 8723 - எட்மன்
076 465 8952 - எமில்

(CS/61513) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



வேம்பொடுக்கேணி இ.தி. த. க. பாடசாலை மாணவர்களுக்கான முதலுதவிப் பயிற்சி, சென்.ஜோன்ஸ் படைப்பிரிவின் யாழ்.மாவட்ட உதவி ஆணையாளர் ஈழனேசனால் அண்மையில் வழங்கப்பட்டது. (க)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 16 . 11 . 1939



மறைவு 06 . 06 . 2025

கடந்த 06.06.2025 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் நாகராசா செல்வராசா

(முன்னாள் விற்பனை முகாமையாளர் - மானிப்பாய், பரிஷ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், சமாதான நீதவான்)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் இன்று (26.05.2026) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலங்குளாய்,
சண்டிலிப்பாய்.

(CS/61517) J-1

குடும்பத்தினர்

## நல்லூர் பிரதேசசபை
## மேற்பார்வையாளர் தரம் 111 பதவி வெற்றிடத்தை மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் நிரப்புவதற்கான விண்ணப்பம் கோரல் - 2026

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் அவர்களின் G/NPC/A4/LG/App/LGM/26/01 ஆம் இலக்க 2026.04.16ம் திகதிய மற்றும் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அவர்களது NP/05/01/UNS/Gen ஆம் இலக்க 2026.04.24ம் திகதிய கடிதங்கள் சார்பாக, உள்ளூராட்சி ஆணையாளர். உள்ளூராட்சி அமைச்சு. வடக்கு மாகாணம். அவர்களின் NP/14/1/ET/Uns/Gen/2025 ஆம் இலக்க 2026.05.04ம் திகதிய கடிதம் மூலம் அறியத்தந்ததற்கமைவாகவும் 2013.01.01 ஆம் திகதி தொடக்கம் செயல்வலுப்பெறும் வகையில் வடக்கு மாகாண கௌரவ அளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கான மேற்பார்வையாளர் சேவைக்குரிய சேவைப்பிரமாணக்குறிப்பு மற்றும் அதன் திருத்தங்களுக்கமைவாகவும் நல்லூர் பிரதேசசபையில் காணப்படும். கீழ்க்குறிப்பிடப்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு PL1 சம்பள அளவுத்திட்டத்தில் நிரந்தர பதவிகளில் கடமையாற்றுபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவிப்பெயர் | தரம் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| வேலை/ வெளிக்கள மேற்பார்வையாளர் | 111 | 01 |

**பொதுவான தகைமைகள்:**

1. விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. திறமையான ஆளுமையும் உடற்தகுதியும் நன்னடத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரி நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் 05 ஆண்டுகள் தொடர்ச்சியான நிரந்தர வதிவிடத்தை உடையவராக இருத்தல் வேண்டும். அவ்வாறில்லாவிடில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 05 ஆண்டுகள் தொடர்ச்சியான வதிவிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். இவை கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்டு பிரதேசசெயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச்சான்றிதழ் அல்லது வாக்காளர் பிரித்தெடுப்பின் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
4. வயது : வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சேவை நிபந்தனைகள்**

1. நல்லூர் பிரதேசசபையில் தொடர்புடைய பதவியில் நிரந்தரமாக கடமையாற்றுவதுடன் பதவியில் உறுதிப்பட்டிருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதிக்கு உடன் முன்னரான ஆகக்குறைந்தது 5 வருடகால தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.

**கல்வி. தொழில்சார் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி நல்லூர் பிரதேசசபையில் தேர்ச்சியற்ற சேவையில் கடமையாற்றுபவராகவும் PL1 சம்பளத்தொகுதி உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

2. க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஆகக்குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச்சித்தியுடன் தமிழ்மொழி. கணிதம் ஆகிய இரண்டு பாடங்கள் உள்ளடங்கலாக 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம் :**

பொது நிர்வாக சுற்றிக்கை 10/2025க்கு அமைவான. சம்பளத்தொகுதி MN 1-2025 க்கு ஏற்ப மேற்பார்வையாளர் தரம் - 111 பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டமானது ரூபா 45,230 – 10 X 540 – 11 X 630 – 10 X 890 – 10 X 1,190 – 78,360/= ஆகும்.

**தெரிவு செய்யப்படும் முறை :**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக் குழுவினால் தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்பட்டு மேற்பார்வையாளர் நியமனம் வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 2026.06.10**

**விண்ணப்பிக்கும் முறை :**

நல்லூர் பிரதேசசபையின் தாபனப்பகுதியில் 2026.05.26ஆம் திகதி முதல் உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு விண்ணப்ப முடிவுத்திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு செயலாளர். 14/5. கருவப்புலம் வீதி. கொக்குவில் எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும்போது சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

யுகராஜா ஜெலீபன்
செயலாளர்,
நல்லூர் பிரதேசசபை.

26.05.2026

## வேலணை பிரதேச சபை, வேலணை
## சுகாதார மேற்பார்வையாளர் தரம் III பதவி வெற்றிடங்களினை மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் நிரப்புவதற்கான விண்ணப்பம் கோரல் - 2026

மாகாண ஆளுநரின் செயலாளரின் G/NPC/A4/LG/App/LGM/26/01 ஆம் இலக்க 2026.04.16 ஆம் திகதிய கடிதம் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி ஆணையாளரின் NP/14/1/ET/Uns/Gen/2025 ஆம் இலக்க 04.05.2026 ஆம் திகதிய கடிதம் மூலம் அறியத்தந்ததற்கமைவாகவும், 01.01.2013 ஆம் திகதி தொடக்கம் செயல்வலுப்பெறும் வகையில் வடமாகாண கௌரவ ஆளுநரால் அனுமதிக்கப்பட்ட வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கான சுகாதார மேற்பார்வையாளர் சேவைக்கான சேவைப் பிரமாணக்குறிப்பு மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைவாகவும் வேலணை பிரதேச சபையில் அப்பதவிகளில் காணப்படும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவான வெற்றிடத்தினை நிரப்புவதற்கு PL1 சம்பள அளவுத்திட்டத்தில் உள்ள பதவிகளில் நிரந்தரமாகக் கடமையாற்றுபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல | பதவிப்பெயர் | தரம் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | சுகாதார மேற்பார்வையாளர் | III | 01 |

**பொதுவான தகைமைகள்**

- விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- திறமையான ஆளுமையும் உடற்தகுதியும் நன்னடத்தையையும் கொண்டிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி வேலணை பிரதேச சபை எல்லைக்குள் 05 ஆண்டுகள் தொடர்ச்சியான நிரந்தர வதிவிடத்தை உடையவராக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தினுள் 05 ஆண்டுகள் தொடர்ச்சியான வதிவிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். இவை கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது வாக்காளர் பிரித்தெடுப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- வயது - வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சேவை நிபந்தனைகள்**

- வேலணை பிரதேச சபையில் தொடர்புடைய பதவியில் நிரந்தரமாகக் கடமையாற்றுவதுடன் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- நியமனம் பெறுபவர்கள் ஒருவருட கால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.
- விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முன்னரான ஆகக்குறைந்தது 5 வருடகால தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.

**கல்வி, தொழில்சார் தகைமைகள்**

- விண்ணப்பதாரி வேலணை பிரதேச சபையில் தேர்ச்சியற்ற சேவையில் கடமையாற்றுபவராகவும் PL 1 சம்பள தொகுதியுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
- க.பொ.த சாதாரண பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஆகக் குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச்சித்தியுடன் தமிழ்மொழி, கணிதம் ஆகிய இரண்டு பாடங்கள் உள்ளடங்கலாக 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**

- பொது நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இற்கமைவான சம்பளத்தொகுதி MN 1 - 2025 இற்கு ஏற்ப சுகாதார மேற்பார்வையாளர் பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டம் 45,230 10x540-11x630- 10x890 -10x1190 - 78360 ஆகும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி : 2026.06.08**

**விண்ணப்பிக்கும் முறை**

வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 2026.05.26 ஆம் திகதி முதல் உரிய விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு செயலாளர், வேலணை பிரதேச சபை, வேலணை என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும்.

- ஆட்சேர்ப்புத் திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமையற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ நியமனத்தின் போதோ அல்லது நியமனத்தின் பின்னரோ தெரியவரும் போது அல்லது தகவலொன்று பொய்யானது என தெரியவரும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் இந்நியமனம் இரத்துச்செய்யப்படும்.
- விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
வேலணை பிரதேச சபை,
வேலணை.

26.05.2026

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுகளைக் கையாளும் ஊழியர்கள் பாதுகாப்பு அங்கி அணிவது கட்டாயம்!

## மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், மே 26**

**உணவகங்களில் உணவு தயாரிப்பு மற்றும் பரிமாறலில் ஈடுபடுவோர், உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு, முறையாகவும், பொருத்தமான வேளைகளிலும் தனிநபர் பாதுகாப்பு அங்கிகளை அணிந்திருப்பது கட்டாயம் என்று யாழ்ப்பாணம் மேற்பார்வைப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் வலியுறுத்தினார்.**

உணவு கையாளும் நிறுவன ஊழியர்களுக்கு அண்மையில் நடைபெற்ற கருத்தமர்வில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
எமது உடலில் அதிகளவான நுண்ணங்கிகள் காணப்படக்கூடிய இடங்களில் தலைமுடி முக்கியமானது. தலைமுடி உணவில் விழுவதன் மூலமோ அல்லது கைகளால் தலைமுடியைத் தொட்டபின் உணவைக் கையாளுதல் மூலமோ உணவு மாசடைகின்றது. இதைத்தடுக்க பொருத்தமான தலையுறைகளை(தொப்பியை) அணியவேண்டும். தலையுறைகளை மீண்டும் மீண்டும் பாவிக்கக்கூடாது. ஒருமுறை பாவித்தபின் பாவனையிலிருந்து அகற்றவேண்டும். உயரமான, மேற்புறம் காற்றோட்டத்துக்காக திறந்த அல்லது மிகச் சிறிய வலையமைப்புத் துவாரங்களையுடைய தொப்பிகளை அணியலாம். அத்துடன் ஏப்பிரன் அணிவது ஊழியரை தீ விபத்துகளிலிருந்து காக்கவும், அவர் மீதான நேரடி வெப்பத்தாக்கத்தைத் தடுக்கவும், உடை அழுக்கடையாதிருக்கவும், அவரிலிருந்து வியர்வை மற்றும் அழுக்குகள் உணவுடன் சேர்வதைத் தடுக்கவும் உதவுகின்றது. எனவே தீப்பற்றும் ஆற்றல் குறைந்த, தடித்த பருத்தித்துணிகளாலான சட்டைப்பைகள் எதையும் கொண்டிராத வெள்ளை அல்லது மெல்லிய நிறத்துணியால் ஆக்கப்பட்ட ஏப்பிரனை, அணிந் திருக்கவேண்டும். அதேவேளை கையுறைகளைக் கைகளில் அணிந்துகொண்டு எப்போதும் உணவு பரிமாறுவது தவறு. இதனால் அனைத்து மேற்பரப்புகளுடனும் கையுறைகள் தொடர்புபட்டு விரைவாக மாசுபட்டு, அது பரிமாறும் உணவை மாசாக்குகின்றது. எனவே எப்போதும் கைகளைச் சவர்க்காரமிட்டு ஓடும் நீரில் கழுவியபின் உணவு பரிமாறுவதே பாதுகாப்பானது. சமைக்கும்போதும், உணவு பரிமாறும் போதும் வாய்க்குள் எந்தப்பொருள்களையும் இட்டு மெல்லக்கூடாது. அத்துடன் முகக்கவசம் அணிந்திருப்பது வரவேற்கத்தக்கது.

அத்துடன் அரைக்காற்சட்டை, சாரம் அணிவதும் மேலுடல் தெரியக்கூடிய பெனியன் அணிவது அல்லது மேலாடை அணியாது உணவு சமைப்பது, பரிமாறுவது தவிர்க்கப்பட வேண்டும். இவ்வாறாக தனிநபர் பாதுகாப்பு அங்கிகளைப் பொருத்தமான விதத்தில் பயன்படுத்தி, உணவுப்பாதுகாப்பை மேம்படுத்தவேண்டும்- என்றார். (க)



# வலிகாமம் கிழக்கில் பாத்தீனியம் ஒழிப்பு

அச்சுவேலி,மே 26
கிளீன் சிறிலங்கா தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களத் தால், பத்தமேனி பற்றிக் நிலைய வளாகத்தில் பாத்தீனியம் ஒழிப்பு வேலைத்திட்டம் கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப் பட்டது.
இதில் கிராமமட்ட உத்தியோகத்தர்கள், சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர், தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர், திட்டமிடல்பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழிற்துறைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம மக்கள் பங்கேற்றனர். (க)

# தேர்தலை நடத்தத் தயங்கும் அரசாங்கமா அதிகாரப்பகிர்வுக்கு ஒத்துழைப்புத் தரும்?

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் கேள்வி

கிளிநொச்சி, மே 26
மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்தத் தயங்கும் அரசாங்கம், எவ்வாறு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அதிகாரப்பகிர்வுக்கு ஒத்துழைப்பு வழங்கும் என்று சமத்துவக் கட்சியின் பொதுச்செயலாளர் மு.சந்திரகுமார் கேள்வி எழுப்பியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வரும்போது மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துவதாக வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னர் தேர்தலை நடத்தாமல் தந்திரோபாயமாக இழுத்தடித்து வருகின்றது. தேர்தல் மூலம் தமக்கான பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்யும் ஜனநாயக உரிமையை மறுதலித்து, 9 மாகாணங்களிலும் ஆளுநர் ஆட்சியை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இது மக்கள் விரோத நடவடிக்கை. இலங்கையில் உள்ள அனைத்துக் கட்சிகளும் மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும் என்றே வலியுறுத்திவருகின்றன. இந்தச் சூழலில் இந்த ஆண்டு நிச்சயமாக மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறும் என்று அரசாங்கத்தரப்பிலிருந்து அமைச்சர்கள் வாக்குறுதி அளித்துக் கொண்டிருக்கும் போது, அதை மறுதலிக்கும் விதமாக ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் டி சில்வா மாகாணசபைகளுக்கான தேர்தல் நடப்பாண்டில் நடைபெறாது என்று அறிவித்திருக்கின்றார். அரசாங்கத்தில் நேரடியான பங்கேற்பைக் கொண்டிருக்காத போதும் ரில்வின் சில்வா அரசாங்கத்தில் எல்லாவற்றையும் தீர்மானிக்கும் சக்தியாக
இருப்பதால், அவருடைய கூற்றே கவனத்தில் கொள்ளப்படுகின்றது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அதிகாரப்பகிர்வுக்காக இதுவரையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாகாண சபைகளுக்கான தேர்தலையே நடத்தத் தயங்கும் அரசாங்கம், எவ்வாறு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அதிகாரப்பகிர்வுக்கு ஒத்துழைக்கும்- என்றார். (சு-214)


# மரண அறிவித்தல்

மலர்வு
02 . 03 . 1941



உதிர்வு
23 . 05 . 2026

## தம்பிப்பிள்ளை பவானிதேவி
(ஓய்வுநிலை ஆசிரியர்)

கைதடி தெற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை பவானிதேவி அவர்கள் 23.05.2026 சனிக்கிழமை அன்று காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான ஜெகரத்தினம் - சௌபாக்கியலட்சுமி தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மருமகளும் தம்பிப்பிள்ளை (ஓய்வுபெற்ற பட்டயக் கணக்காளர்) அவர்களின் அன்பு மனைவியும், அமரர் பரமேஸ்வரி, அமரர் செந்தில்நாதன் (ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர்), Dr.நல்லைநாதன், அமரர் சிற்சபாநாதன் (சாவகச்சேரி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்), சத்தியநாதன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), கதிர்காமநாதன் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்) கைலைநாதன் (கணக்காளர், நியூஸிலாந்து) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார். Dr.அருட்சேந்தன் (கைதடி), Dr.ஞானசேந்தன் (அமெரிக்கா), Dr.தவச்சேந்தன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஹரிப்பிரியா (அமெரிக்கா), அபிராமி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆர்த்தி (அமெரிக்கா) வாசகன் (அமெரிக்கா) பாற்கவன் (அமெரிக்கா), நீலன் (அமெரிக்கா), வாமனன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான தங்கம், சிவசம்பு, கௌரி, முத்துக்குமாரசாமி மற்றும் சந்தானலட்சுமி, பவளராணி, சிதம்பரேஸ்வரி, மைதிலி, வாசுகி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியை நாளை 27.05.2026 புதன்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி காலை 10.00 மணிக்கு கைதடி தெற்கு ஊரியான் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொது நூலக வீதி,
[illegible] தெற்கு, கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.
076 6390 820

CS 31856 A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பயங்கரவாதத்துக்கு எதிராகவே போரிட்டதாம் இலங்கை இராணுவம்

## கத்தோலிக்க திருச்சபை விஷக் கருத்து

கொழும்பு, மே 26
இலங்கையில் பயங்கரவாதத்துக்கு எதிரான போரே இடம்பெற்றது. மாறாக எந்தவொரு இனக் குழுமத்துக்கும் எதிராகப் போர் இடம்பெறவில்லை இவ்வாறு கத்தோலிக்க திருச்சபையின் தேசிய சமூகத் தொடர்புப் பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த பெர்னாண்டோ கூறியுள்ளார்.
இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின்போது இனப்படுகொலை நிகழ்ந்தமை உண்மைதான் என்று அருட்தந்தை ஜீவத்த பீரிஸ்அண்மையில்கூறியிருந்தார். அவருடைய கருத்துக்கு திருச்சபைக்குள் இருந்து கடும் எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிக்கையிலேயே, இலங்கை இராணுவம் பயங்கரவாதத்துக்கு எதிராகவே போரிட்டது என்றும், இனக்குழுமங்களுக்கு எதிராகப் போர் இடம்பெறவில்லை எனவும் கத்தோலிக்க திருச்சபையின் தேசியசமூகத்தொடர்புப்பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த பெர்னாண்டோ கூறியுள்ளார்.
இதேவேளை, கத்தோலிக்க ஆயர்கள் பேரவையும் அருட்தந்தை ஜீவத்தபீரிஸின் கருத்தைக் கண்டித்துள்ளது. 'அருட்தந்தை ஜீவத்த பீரிஸ் கத்தோலிக்க திருச்சபையின் சித்தாந்தத்தை வெளிப்படுத்தவில்லை. அவர் தனது சொந்தக் கருத்தையே வெளிப்படுத்தியுள்ளார். இலங்கையில் உள்ள கத்தோலிக்க திருச்சபை நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு எப்போதும் உழைக்கும்' என்று கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் சமூகத் தொடர்புக்கான ஆணைக்குழுவின் தலைவரும், ஆயருமான ஜூட் நிஷாந்த சில்வா தெரிவித்துள்ளார். (அ-ம-இ)

### அரசுக்கு...

என ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா யாழ்ப்பாணத்தில் வைத்துக்கூறியிருந்தார். இந்த அறிவிப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே, மக்களின் ஆணைமூலம் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்துக்குப் புறம்பான சக்தியொன்று நாட்டை இயக்குகின்றது என்று தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இந்த வருடத்தில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாது என்று ரில்வின் சில்வா கூறியிருந்தார். இந்தக் கருத்தை வெளியிடுவதற்கு அவருக்கு என்ன உரிமையுள்ளது. ரில்வின் சில்வாவுக்கு அரசாங்கத்தில் உள்ள பதவி என்ன? நிதி அமைச்சரா?, மாகாண சபைகள் அமைச்சரா?. இல்லை. அவர் அரசாங்கத்தில் எவ்வித பதவியும் வகிக்கவில்லை. தேர்தல் ஆணைக் குழு உறுப்பினரும் அல்லர். எனவே, எப்படி தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பில் கதைக்க முடியும்? மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் இருந்தாலும் பெலவத்தை ஊடாகவே ஆட்சி நடத்தப்படுகின்றது என நாம் பலமுறை கூறியுள்ளோம். அது உண்மை என்பதை ரில்வின் சில்வாவின் கூற்று வெளிப்படுத்துகின்றது - என்றார். (அ-ம-இ)

### வடக்கு...

ராணுவத்தை நினைவுகூருவதற்குச் சென்றால் வாக்குமூலம் வழங்க வேண்டிய நிலைமை தற்போது உள்ளது. ஆனால், பயங்கரவாதிகளை நினைவுகூருவதற்கு தலைக்கவசம் இன்றிப் பயணிப்பதற்குக்கூட சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. எமக்குத் தமிழ் மக்களுடன் பிரச்சினை இல்லை. பிரிவினைவாதிகளுடன் தான் பிரச்சினை உள்ளது.
மாகாணசபைத் தேர்தல் நடக்காது என ஜே.வி.பி.யின் செயலாளர் கூறி வருகின்றார். தெற்கில் தேர்தலை நடத்துவதற்கு அச்சமெனில் குறைந்தபட்சம் வடக்கு மாகாணசபைத் தேர்தலையாவது நடத்துமாறு அரசாங்கத்துக்கு சவால் விடுகின்றேன். முதுகெலும்பிருந்தால் இந்த சவாலை அரசாங்கம் ஏற்கட்டும். மஹிந்த ராஜபக்ச வடக்கு மக்களுக்கு ஜனநாயக சுதந்திரத்தை வழங்கினார். அவர் தேர்தலை நடத்தினார். வடக்கு மக்களுக்குரிய உரிமைகளைப் பற்றி பேசமுன்னர் தேர்தல் உரிமையைக் காட்டுங்கள் - என்றார். (அ-ம-இ)

### திசைகாட்டி...

படையினர் நினைவு வளாகத்துக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் விமல் வீரவன்ஸ நேற்றுக் கைது செய்யப்பட்டார். எனினும், நீதிமன்றம் அவரைப் பிணையில் விடுவித்தது. இதன் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் தெரிவித்ததாவது:-
முன்னாள் அரசியற்தலைவர்கள் அனைவரும் தற்போதைய அரசால் திட்டமிட்டுப் பழிவாங்கப்படுகின்றனர். இதன் ஒரு பகுதியாகவே எனக்கு எதிரான வழக்கும் அமைந்துள்ளது. என்னை விளக்கமறியலில் வைக்கவே அரசாங்கம் திட்டமிட்டது. ஆனால் நீதிமன்றம் என்னைப் பிணையில் விடுவித்துள்ளது. அரசாங்கத்துக்கு மக்களின் ஆதரவு குறைவடைய ஆரம்பித்துள்ளது. இதன் விளைவாகவே எம்மைச் சிறையில் அடைத்து எதிர்ப்புக் குரல்களை இல்லாமல் செய்வதற்கு எத்தனிக்கின்றனர் - என்றார். (அ-ம-இ)

### தூக்குத்...

பாணம் சிறைச்சாலைக்குள் உயிர் மாய்த்துள்ளார்.
18 வயது மாணவியான சிவலோகநாதன் வித்தியா 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி யாழ். புங்குடுதீவுப் பகுதியில் பாடசாலையிலிருந்து தனது வீடுநோக்கித் திரும்பிக் கொண்டிருந்தபோது கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.
இந்த வழக்கில் கடந்த 2017ஆம் ஆண்டு ஏழு பேருக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கியது. எனினும் உச்ச நீதிமன்றம் இருவரை விடுவித்த நிலையில் ஐந்து பேருக்கு மரண தண்டனை உறுதி செய்யப்பட்டது. அவர்களில் ஒருவர் சிறையில் உயிரிழந்துவிட ஏனைய நால்வரும் மேன்முறையீடு செய்தனர். இந்த நிலையில் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம், யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம் விதித்த மரணதண்டனையை உறுதிசெய்து கடந்த 6ஆம் திகதி தீர்ப்பு வழங்கியது. குறித்த தீர்ப்பை வாசிப்பதற்காக யாழ். மேல் நீதிமன்றத்தில் நேற்றையதினம் முன்னிலைப்படுத்த வேண்டிய தேவை காணப்பட்டதால் நேற்றுமுன்தினம் கைதிகள் அனைவரும் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு கொண்டு வரப்பட்டிருந்தனர். இதன்போதே மரணதண்டனைக் கைதியான பூபாலசிங்கம் ஜெயக்குமார் (வயது-46) சிறைக்குள் உயிர் மாய்த்துள்ளார்.
அவர் தவறான முடிவெடுத்தே உயிரிழந்தார் என உடற்கூற்றுப் பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. உயிரிழந்தவரின் உடலைப்பெற அவருடைய உறவினர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளனர். இதையடுத்து, அரச செலவில் இறுதிச் சடங்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### மகளை...

பில் மேலும் தெரிய வருவதாவது:-
கிளிநொச்சி - கழைப்போக்கு - உருத்திரபுரம் வீதியில் நேற்று நண்பகல் வேளையில் சில இளைஞர்கள் அதிவேகமாக மோட்டார்சைக்கிளைச் செலுத்தி கேளிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதன்போதே, பாடசாலையில் இருந்து மகளை ஏற்றுவதற்காகச் சென்ற பெண்ணுடன் அந்த இளைஞர்கள் பயணித்த மோட்டார்சைக்கிள் கோரமாக மோதியுள்ளது. இதையடுத்து அந்தப் பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் காயமடைந்த நிலையில் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
விபத்துக்குள்ளான மோட்டார்சைக்கிளில் பயணித்த மற்றொரு இளைஞர் தப்பியோடிய நிலையில் அவரைக் கைது செய்வதற்கு தற்போது நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113-55)

### கைதிகளை...

செய்யப்பட்டுள்ளன. இதன்படி, நாடு முழுவதும் உள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் எதிர்வரும் 28 மற்றும் 30 ஆகிய திகதிகளில் இந்த அனுமதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

### தென்னக்கோனுக்கு...

பட்டவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் கீழ் இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளது. சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுஹர்ஷி ஹேரத் இந்தத் தகவலை வெளியிட்டார். இன்னும் ஒரு மாதத்துக்குள் இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். (அ-ம)


### வனவளத்...

மன்னார் - சிலாவத்துறை பிரதேச செயலாளர் பிரிவில், கடற்படையால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள முள்ளிக்குளம் மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போதே, கடற்படையால் கைப்பற்றப்பட்ட காணிகளை வனவளத் திணைக்களத்திடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜெயசேகர கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
முள்ளிக்குளத்தில் கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் உள்ளிட்ட தரப்பினர் பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தி வந்துள்ளனர். எனவே, அவர்களின் கோரிக்கைக்கு அமைய முள்ளிக்குளம் பகுதியில் கணிசமான காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ள ஆயிரத்து 12 ஏக்கர் காணிகளில் 753 ஏக்கர் காணிகளை நிபந்தனையுடன் விடுவிக்கவுள்ளோம். அதாவது காணிகள் வன வளத் திணைக்களத்திடமே விடுவிக்கப்படும். வன அழிப்பு உள்ளிட்ட விடயங்களில் இருந்து காணிகளைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட்டு.மத்திய கல்லூரிக்கு. உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரனால், ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள், பாடசாலை அதிபர் திருமதி தில்லைச்செல்வன் வதனியிடம் கையளிக்கப்பட்டன. (க)



நெடுந்தீவு பிரதேச சபைக்கு உட்பட்ட கிணறுகள் தூர்வாரப்பட்டு, பொது மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளன. அண்மைக்காலமாக கிணறுகளுக்குள் பாசிகள் வளர்ந்த நிலையில், துர்நாற்றம் வீசுவதுடன், மக்கள் பயன்படுத்தமுடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது. இதுதொடர்பில் பொதுமக்கள் பிரதேசசபை உறுப்பினர் பே.கஸ்பஸ் தோமஸிடம் விடுத்த கோரிக்கையை அடுத்து, குறித்த விடயம் பிரதேசசபைத் தவிசாளரின் கவனத்துக் கொண்டு செல்லப்பட்டது. அதையடுத்து கிணறுகள் அனைத்தும் நெடுந்தீவுப் பிரதேசசபையால் துப்புரவு செய்யப்பட்டன. (க)

# அக்கரையில் சிரமதானம்

'அழகான கடற்கரை ஓர் கவர்ச்சிகரமான சுற்றுலாத்தளம்' எனும் தேசிய செயற்றிட்டத்தில், 511ஆவது இராணுவப் படைப்பிரிவினரின் அனுசரணையுடன், இடைக்காடு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள அக்கரைக் கடற்கரையைச் சுத்தப்படுத்தும் செயற்றிட்டம் கடந்த சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

கோப்பாய் பிரதேச செயலரின் அனுமதியுடன் உதவித்திட்டமிடல் பணிப்பாளரின் வழிகாட்டலில், வலி. கிழக்குப் பிரதேசபை உத்தியோகத்தர்கள், அச்சுவேலி கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர், சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர், தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பலாலி சிறுவர்களக உறுப்பிணர்கள், பிரதேசசபை ஊழியர்கள், கடற்றொழில் அமைப்பினர், சமூகமட்ட அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து சிரமதானத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து வளலாய் கடற்கரையோரங்களும் சுத்தப்படுத்தப்பட்டன. (க)



OPEnE

VACANCY NOTICE

OPEnE invites enthusiastic, experienced, and motivated candidates to apply for the following position.

**Available Position:**

- **Disaster Risk Reduction Specialist (DRR)**

Email your applications (Cover letter and CV) on or before 5th June 2026 (Friday) to the Team Leader - OPEnE | Email: info@openesrilanka.org

காணி விற்பனைக்கு

யாழ் அச்சுவேலி நவக்கிரியில் 4 1/2 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு.

* அச்சுவேலியிலிருந்து நிலாவரை செல்லும் பிரதான வீதிக்கு அருகாமையில்
* ஒன்றரை (1 1/2) பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 15 அடி பாதையுடன்
* சுன்னாகத்திலிருந்து புத்தூர் செல்லும் பிரதான வீதி 200m தூரம்
* அச்சுவேலி நகரம் 2km
* பருத்தித்துறை வீதி 1km தூரம் (புத்தூர் சந்தி)
* நிலாவரை கிணறு 700m தூரம்
* செம்மண் காணி, நன்னீர் ஊற்று நிலம், நல்ல சூழல்
* ஒரு பரப்பின் விலை 18 இலட்சம் மட்டும் (1800000/=)

(CS 31876) J-1

தொடர்புகளுக்கு:

077 2880 152, 076 7390 413

# அரசின் கைப்பாவையாக அரச சேவை மாறக்கூடாது!

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, மே 26

அரசு ஊழியர்கள் என்பவர்கள் காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வரும் அரசியல் அதிகாரிகளின் கைப்பாவைகள் அல்ல. அரசியல் தலையீடுகள் இல்லாத, தகுதி, திறமை மற்றும் நேர்மையின் அடிப்படையில் இயங்கும் ஒரு வினைத்திறன் மிக்க சுயாதீன அரச சேவையைக் கட்டியெழுப்புவதே எமது முதன்மை நோக்கமாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

சர்வதேச பொருளாதார விதிகளின் படி, ஒரு நாட்டின் மத்திய வங்கிக் கையிருப்பில் எப்போதும் குறைந்தது 3 மாதங்களுக்கான இறக்குமதிப் பெறுமதியை ஈடுசெய்யக் கூடிய அளவு நிதி இருக்கவேண்டும். எமது நாட்டின் கையிருப்பில் தற்போது 7 பில்லியன் அமெரிக்க டொலர் இருப்பதாக தற்போதைய அநுர அரசாங்கம் பெருமை பேசுகிறது. ஆனால், உண்மை என்னவென்றால் அதில் 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் சீன யுவான் (Yuan) நாணயமாக முடக்கப்பட்டுள்ளது.

நிபந்தனைகளின்படி அதனை எம்மால் உடனடியாகப் பயன்படுத்த முடியாது. எமது நாட்டுக்கு ஒவ்வொரு மாதமும் இறக்குமதிக்காக மட்டும் 2 பில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்படுகிறது.

அப்படியிருக்க, கையிருப்பு குறித்த அரசாங்கத்தின் போலி மாயைகளில் சிக்காமல், உண்மையான நிதி நிலைமையை உணர்ந்து நாம் செயற்பட வேண்டும்.

நாட்டில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மக்களின் விகிதம் 100 இல் தொடங்கி 140 வரை மிக உக்கிரமாக உயர்ந்துள்ள நிலையில், 220 இலட்சம் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க ஏற்றுமதித்துறையை மேம்படுத்தி, நேரடி வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் புதிய வேலைத்திட்டம் அவசியமாகும்.

அரச அதிகாரிகளே இந்த நாட்டின் உண்மையான நிர்வாக இயந்திரம். அரசியல் தலையீடுகள் இல்லாத, வினைத்திறன் மிக்க மற்றும் நேர்மையான அரச சேவையொன்றைக் கட்டியெழுப்புவதே சிறந்தது- என்றார். (ச-இ)

மரண அறிவித்தல்

குணநாயகம் அமராவதி



தோற்றம் 19.12.1939

மறைவு 25.05.2026

இல.27, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலியை
பிறப்பிடமாகவும்,
வதிவிடமாகவும் கொண்ட
குணநாயகம் அமராவதி அவர்கள்
நேற்று (25.05.2026)
திங்கட்கிழமை
இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான
கணபதிப்பிள்ளை குணநாயகம்
அவர்களின் அன்பு
மனைவியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியை
இன்று (26.05.2026)
செவ்வாய்க்கிழமை மு.ப 10:00
மணியளவில் அவரது இல்லத்தில்
நடைபெற்று பூதவுடல்
தகனக்கிரியைக்காக கொக்குவில்
இந்து மயானத்திற்கு
எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார்,
உறவினர் மற்றும் நண்பர்கள்
அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு
கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
சமரநாயகம் - 077 618 3283
மயூரன் - 077 236 7848

(CS/61514) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org